Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 14 | ஐ. அவ் 6 | ஆனி 5 | ஞாயிற்றுக்கிழமை | (18—6—72) | இதழ் 129




# பயங்கரவாதிகள் பொறளை சிறையிலிருந்தும் தப்பினர்!

## அநுராதபுரக் காடுகளில் தேடுதல் நடக்கிறது

கொழும்பு, சனி
பயங்கரவாதிகள் எனக் கருதப்படும் இரு கைதிகள் நேற்று பொறளை வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார்களென பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பொலநறுவை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற பயங்கரவாதிகளில் இருவர் குருநாகலில் வைத்து மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற பயங்கரவாதிகளில் இருவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர்.

அநுராதபுரம்சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற பயங்கரவாதிகளை அநுராதபுரம் காடுகளில், பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடத்திக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இதுவரை எவரும் கைதாக வில்லை. தொடர்ந்து காடுகளில் தேடுதல் நடைபெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கௌனை

மன்னார் தலைவாச்சி ரோட்டிலுள்ள கடை ஒன்று நேற்று நள்ளிரவு கொள்ளையடிக்கப்பட்டது. அநுராதபுரச் சிறையிலிருந்து தப்பியோடிய பயங்கரவாதிகளில் சிலரே இக்கொள்ளையை நடாத்தியிருக்கலாமென பொலிஸார் நம்புகின்றனர். வவுனியா பொலிஸார் இவர்களைப் பிடிப்பதில் தீவிர வேட்டையில் இறங்கியுள்ளனர்.

## 55 வயதான ஆசிரியருக்கு பதவி காலம் நீடிப்பு

(நமது நிருபர்)

55 வயதை விரைவில் பூர்த்திசெய்து ஓய்வுபெறவேண்டிய ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு இறுதிவரை பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு இத்தீர்மானத்தை நேற்று அறிவித்தது.

கல்வி அமைச்சின் இந்நடவடிக்கைமூலம் நாடெங்குமுள்ள மூவாயிரம் ஆசிரியர்கள் பயனடைவார்கள்.

இந்த ஆண்டு இறுதியில் 56 வயது பூர்த்தியாகும் ஆசிரியர்கள் சேவை அப்பாடசாலைக்கு முக்கியமாகக் கருதப்படும் பட்சத்தில் அவர்கள் பதவிக்காலம் நீடிக்கப்படும்.

அதேசமயம் 60 வயது பூர்த்தியாகிய ஆசிரியர்களின் சேவைக்காலம் எக்காரணத்தைக் கொண்டும் நீடிக்கப்படமாட்டாதென கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

## சுயநலங்கருதியே இப்படிகூறுகின்றனர்

யாழ்ப்பாணம், சனி

'புதிய அரசியல் திட்டத்தில் தமிழருக்கும் தமிழினத்திற்கும் உரிமைகள்கிடைத்துவிட்டன என சிலர் கூறிவருகின்றனர். சுயநலத்திற்காகவும், சில சலுகைகள் பெறுவதற்குமே இப்படி கூறுகின்றனர்'

தமிழர் கூட்டணி அமைப்பின் சாவகச்சேரியில் நடந்த வாலிப முன்னணி கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறியதாவது:

புதிய அரசியல் திட்டத்தில் தமிழினத்துக்குரிய தமிழ் மூக்குமுரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்பு தமிழ்மக்களாகிய எங்கள் கையில் தான் இருக்கின்றது. இந்நிலையில் அரசியல்கட்சிப் பேதங்களை பாராட்டாமல் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து எங்களது உரிமைகளை நாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சாவகச்சேரி எம். பி திரு வி. என். நவரத்தினம், மற்றும் பலரும் பேசினர்.

## 'நாதஸ்வர இளம்வேந்தன்'

[நமது நிருபர்]

புளியங்கூடல் மகாமாரியம்மாள் ஆலயத்தேர்த் திருவிழாவன்று அன்னை நாதஸ்வர வித்துவான் குமாரதாஸ் கடுப்பையாவுக்கு திருவிழா உபயகாரர் திரு கொ முத்துத்தம்பி "நாதஸ்வர இளம் வேந்தன்" என்னும் பட்டத்தை அளித்து தங்கப் பதக்கமும் பரிசாக வழங்கிக் கௌரவித்தார்.

## ரயில் விபத்தில் 50 பேர் மாண்டனர்!

பாரிஸ், ஜூன் 17

பிரான்ஸில் இன்று நடந்த ரயில் விபத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

எதிர் எதிராக வந்த இரு ரயில்கள் மோதிக்கொண்டதால் ரயில்களில் பிரயாணம் செய்த 50 பேர் ஸ்தலத்திலேயே மரணமானதுடன், 85 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

விடுதலையைக் கழிப்பதற்காக சென்ற உல்லாசப்பிரயாணிகளும் இதிலிருந்தனர்.

## முதல்கட்ட வேலைகள் பூர்த்தி!

(நமது நிருபர்)

கதிர்காமம் புனிதநகர் முதல்கட்டவேலைகள் பூர்த்தியாகிவிட்டன. ஆவணி மாதத்தில் இந்த முதல்கட்ட கட்டிடங்களை பொருளாதார அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திறந்துவைப்பார். அடுத்தகட்ட வேலைகளுக்கு பொதுமக்களின் உதவி கோரப்படுகின்றது.

## 'பிள்ளைகள் மீது போதிய அக்கறை இல்லை'

### பெற்றோர் பற்றி பிரதமர் கவலை

(நமது நிருபர்)

தமது பிள்ளைகளின் விஷயத்தில் போதியளவு அக்கறை எடுக்காததாலேயே கடந்த ஆண்டு ஏப்ரல்மாதத்தில் இந்நாட்டுவாலிபர்கள் தவறான பாதையில் சென்றார்கள் என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

இதனால் நாட்டின் அபிவிருத்தி திட்டத்துக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பணம் வாலிபர்களின் புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்கும் செலவாகி வருகிறது என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களின் ஆதரவில்லாமல் அரசின் திட்டங்களை செயல் படுத்தமுடியாதென்று கூறிய பிரதமர் ஒவ்வொருவருக்கும் தேசபக்தி ஏற்படவேண்டுமென்றார்.

விளக்கொளை கொவித்தியாலய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே இப்படிச் சொன்னார்.

## யாழ் மாவட்ட மின்சார விநியோகம் துண்டிப்பு!

(நமது நிருபர்)

முருகண்டியில் நேற்றுவீசிய பலத்த காற்றினால் யாழ் மாவட்டத்துக்கான மூன்று பிரதான மின்சாரக் கம்பங்கள் மரங்கள் விழுந்ததால் சரிந்து வீழ்ந்தன. இதனால் யாழ் மாவட்ட மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டன ஆயினும் சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து தற்காலிக மின்சார விநியோகத்துக்கு அமைச்சர் ஏற்பாடு செய்தார்


## ஜப்பான் பிரதமர் ராஜினாமா

டோக்கியோ- ஜூன் 17

ஜப்பானியப் பிரதமர் திரு சாட்டோ ராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார். திரு. சாட்டோ பிரதிநிதிகள் ஆட்சிமன்றக் கூட்டத்தில் உணர்ச்சிமயமான உரையை

(2-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

### தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் பேசும் தந்தை...
### பெண் பார்த்துப் பார்த்து அலுத்துப்போய் தன்னெண்ணப்படி நடந்துகொண்ட தனயன்....
### இவர்கள் செயலால் கண்ணீர் வடிக்கும் அப்பாவிப் பெண்.,. இவளுக்கு விமோசனம் கிடைத்ததா?

# சீதனம்

-எஸ். பாரதி-

"முத்து!" உரத்த குரலில் அழைத்த சின்னத்தம்பி கேட்டார்.

'எவ்வளவு நேரமடா உனக்கு வெளிக்கிட...? சரி... சரி... நேரமாச்சு, கெதியாக வெளிக்கிடு... பொன்னம்மா! நீயும் வெளிக்கிடு"

"என்ன அவசரம்... கொஞ்சம் பொறுங்கோவன்... இப்பிடி எத்தினைபோதரம் பெண் பார்க்க என்டு வெளிக்கிட்டாச்சு. ஒரு இடமும் இதுவரை சரிவரேல்லை... இதுவும் என்னவோ...?'

"சரிதான் தொடங்கிவிட்டியோ உன்ர புராணத்தை"

"ஒரு நல்ல காரியத்துக்குப் போறபோது ஏன் திட்டுறியள்? என்னவோ தலைவிதி சரி வாருங்கோ போவம்...' என்றபடி பொன்னம்மா காரின்பக்கம் சென்றாள்.

கார் மூவரையும் சுமந்து கொண்டு பெண்பார்க்கும் வீட்டை அடைந்தது.

"வாங்கோ! வாங்கோ!" பெண்ணைப் பெற்றவர்களின் வரவேற்பு பிள்ளையைப் பெற்றவர்கள் கம்பீரமாக உள்ளே நுழைந்தார்கள்.

"இருங்கோ...' கதிரையை இழுத்துப்போட்டார் பெண்ணின் தந்தை. எல்லாரும் அமர்ந்தார்கள் அந்தச் சின்ன வீட்டை ஒருமுறை நோட்டம்விட்ட சின்னத்தம்பி தனக்குள் ஏதோ நினைத்துக்கொண்டு தலையாட்டினார்.

சம்பிரதாயமான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருந்தபோது, நாணிக்கோணிய பெண்ணை அழைத்து வந்தாள்-அவள் தாய்.

அழகான அவள் முகத்தில் மகிழ்ச்சியும், ஏக்கமும் கலந்திருந்தது. இதற்கு முன்பும் மூன்று பேர் அவளைப் பெண் பார்த்தார்கள் பெண்ணை அவர்களுக்குப் பிடித்துக் கொண்டது. ஆனால் சீதனத்தைப் பிடித்துக்கொள்ளவில்லை இதனால் திருமணம் நடைபெறவில்லை. இதுவும் அப்படி ஆகிவிடுமோ என்ற ஏக்கம்தான் அவள் முகத்தில் படர்ந்திருந்தது.

பெண்ணின் அழகும் அடக்கமும் பொன்னம்மாவைக் கவர்ந்துவிட்டன. பெண் உள்ளே போனபின் மெதுவாக சீதனவிஷயத்திற்கு வந்தார் சின்னத்தம்பி.

'ஐயாயிரம் காசு தாரம் அதைவிட ஏதோ எங்களால இயன்ட அளவு நகைநட்டும் போடுறம்..." என்று இழுத்தார் பெண்ணின் தந்தை.

'என்ன! ஐயாயிரமோ...? அப்பிடியென்டால் உதுசரிவராது பாருங்கோ பதினாயிரம் காசு, சகலவிதமான நகைநட்டு. வீடு அதற்கு வேண்டிய தளபாடங்கள், தட்டுமுட்டுசாமான்கள் எல்லாம் தரவேண்டும்; சின்னத்தம்பியின் குரல் கம்பீரத்துடன் உரத்து ஒலித்தது.

இவ்வளவுதர நான் எங்கை போவன்...? இவளைவிட இன்னும் நாலு பிள்ளையள் வேற... இருக்கு...? தலையைச் சொறிந்தார் பெண்ணைப் பெற்றவர்.

"நான் சொன்னதைச் சொன்னதுதான். இதிலை ஒண்டு குறைஞ்சாலும் சரிவராது..." விட்டுக்கொடுக்காமல் சொன்னார் சின்னத்தம்பி.

அப்பிடிச் சொல்லாதையுங்கோ... இந்த ஐயாயிரத்துக்கே எவ்வளவோ கஷ்டமாக இருக்கு... நீங்கதான் ஏதோ பெரியமனசு செய்ய வேணும்... கல்யாணம் முடிஞ்சபிறகு எங்களாலை முடிஞ்சதை சேர்த்துத் தாறம்... கெஞ்சினார் பெண்ணின் தந்தை.

"நான் கேட்ட சீதனமில்லை யென்டால், உம்முடைய பணத்துக்குத் தக்கமாதிரி மாப்பிள்ளையைப் பாரும்... என்ர மகனை உமக்கு மாப்பிள்ளையாக்க முடியாது...'

பெண்ணைப் பெற்றவர்களால் ஒன்றும் பேசமுடியவில்லை. சின்னத்தம்பியின் பேச்சை அவரின் மனைவியோ மகனோ எதிர்த்துப் பேசிப் பழக்கமில்லாதபடியால் அவர்களாலும் ஒன்றும் பேச முடியவில்லை. அப்போது... புயலென அங்குவந்த பெண் தேவி...

"ஐயா!... இந்தச் சம்பந்தம் எங்களுக்கு வேண்டாம் பணத்திலே ஆசையுள்ளவர்கள் ஒருநாளும் திருப்தி அடைய மாட்டார்கள். தான் பெத்த மகனையே பேரம்பேசி... சீ...!' ஆவேசத்துடன் கூறியவள் அதே வேகத்துடன் சின்னத்தம்பியை நோக்கி.

'பெரியவரே! உங்கள் மகனை வாங்குவதற்கு எங்களிடம் பணமில்லை. நல்ல பணமுள்ள இடத்திற்குக் கொண்டுபோய் விற்பனை செய்யுங்கோ. காய்கறி விற்பதற்கு ஒரு சந்தை இருப்பதுபோலக் கல்யாணச் சந்தையென்று ஒன்று இருந்தால் நல்லது. மாப்பிள்ளையாக உள்ளவர்களின் விலையைக்குறித்து அவர்களை அங்கே நிறுத்திவிட்டால் தங்களிடமிருக்கும் பணத்திற்குத் தக்கபடி பெண்ணைப் பெற்றவர்கள் வந்து வாங்குவார்கள். பணமில்லாதவர்கள் பேசாமலிருப்பார்கள்.' சிறிது மூச்சு விட்டவள் மீண்டும் தொடர்ந்தாள்.

'அதைவிட்டுவிட்டுப் பெண் பார்க்க என்று வேடிக்கையாகக் கிளம்பி, பெண்ணின் மனத்தையும், பெற்றவர்களின் மனத்தையும் ஏன் புண்படுத்துகிறீர்கள்...? நீங்கள் கூட ஒரு பெண்ணிற்குத் தந்தைதானே? உங்களுக்கும் இந்த நிலை வருமல்லவா... அப்போது புரியும்...'

"தேவி...! என்னடி இது...! போடி உள்ளே...' - உள்ளே இழுத்துச் சென்றான் அண்ணன்.

சற்றுமுன் அடக்கமாக குனிந்த தலை நிமிராமல் தலைகுனிந்தபடி வந்த தேவி, இப்போது... பெண்ணின் மனம் பொறுமையின் இருப்பிடம்தான். ஆனால் அந்தப்பொறுமையின் எல்லையை அவள் மீறிவிட்டாள்... அதை யாராலும் தாங்க முடியாது.

தேவியின் பேச்சு சின்னத்தம்பிக்குக் கோபத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. உருத்திரமூர்த்தியானார் அவர்...

'உன்னைவிட அழகான பணக்காரப் பெட்டையை என்ர மகனுக்கு நான் எடுக்கிறேனா இல்லையோ பார்...! பொன்னம்மா! முத்து! ஏன் இன்னும் இருக்கிறியள்...?' கோபத்துடன் கூறியவாறு வெளியேறிய சின்னத்தம்பியைப் பின்தொடர்ந்தனர் மனைவியும் மகனும்.

வீடு வந்து சேரும்வரை மூவரும் ஒன்றும்பேசவில்லை. வீட்டிற்குள் வந்ததும் சீற்றத்துடன் தொடங்கினார் சின்னத்தம்பி-

'அந்தப் பெட்டையைப் பார்த்தியோ... என்ன வாய்க்கொழுப்பு... ஏதோ பெரிய குபேரன்வீட்டுப் பெண்போலை...'

'உங்களுக்கு உதவும் வேணும்... இன்னும் வேணும்... இப்ப எத்தினை வர்சமாகப் பெண் பார்க்கிறியள்... இன்னும் பார்த்து முடியவில்லை. முத்துவுக்கும் வயது ஏறிக்கொண்டு போகுது' பொன்னம்மா முடிக்கவில்லை.

'என்னடி சொல்லுறாய்...? சீதனம் வேண்டாமல் அவனைக்குடுக்கவோ... அவன்ர உத்தியோகத்துக்குப் பெரிய சீதனம் வேண்டவேணும்... [illegible] குறைச்சுக் கேட்டால்... அவனை — சரிசரி... இதைவிடுங்கோ... முத்து நீ பின்னேரம் கொழும்புக்குப்போ. நான் வேறை பெண் பார்க்கிறேன்."

'நீங்க உப்பிடிப் பிடிவாதம் பிடிச்சால் முத்துவுக்குக் கலியாணம் நடவாது. அவனும் ஏதோ உங்களுக்கு அடங்கினவனென்டபடியால் நீங்க சொல்லுறபடி நடக்கிறான். அளவுக்கு மிஞ்சினால் என்ன செய்வானோ...? இப்ப உங்கட பெடியனுக்கு இவ்வளவு கிராக்கிபண்ணுறியள்...நாளைக்கு உங்கடை பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும்பொழுது அவையளும் கிராக்கிபண்ணுவினம்.

'நீ எனக்குப் புத்தி சொல்லுறியோ... என்ர அலுவல் பார்க்க எனக்குத் தெரியும்... பெடியனை நல்ல சீதனத்தோடை கொடுத்தால், அந்தக் காசிலை தங்கச்சியையும் கொடுக்கலாம்..."

'அப்பிடியென்டால் போனமுறை பார்த்த இடத்திலை பதினையாயிரம் காசு, வீடுவாசல் எல்லாம் தாரதென்டவை... ஏன் அதைக் குளப்பிறியள்...?'

'அவையள் கொஞ்சம் பணக்காரர் என்டபடியால் இன்னும் கொஞ்சம் கூடக் கேட்டன்... அவை மறுத்துப்போட்டினம்...'

'ஓ!... உப்பிடித்தானேஒவ்வொரு இடத்திலையும் தாற சீதனத்தைவிட நீங்க கூடக் கேட்கிறது... கடைசியிலை குளப்பிறது...' ஏசியபடியே சமையற்கட்டிற்குள் புகுந்தாள் பொன்னம்மா.

0 0 0

பின்பும் எத்தனையோ இடத்தில் பெண்பார்த்தார் சின்னத்தம்பி. ஆனால் ஒன்றும் கைகூடி வரவில்லை.

ஒருநாள் பெண்பார்க்க வெளியே சென்ற சின்னத்தம்பி கோபத்தோடுவீட்டிற்குள் நுழைந்தார்.

என்ன இண்டைக்கு ஒரு மாதிரி இருக்கிறியள்...? ஆரோடையும் சண்டை இண்டை பிடிச்சுப்போட்டியளோ...?" என்று கேட்டாள் தன் பர்த்தாவின் குணத்தை அறிந்த பொன்னம்மா.

'அவன் முத்து ஆரோஒரு பெட்டையைக் கலியாணம் முடிச்சிட்டானாம்... ராமசாமியின்ர மோன் நேற்றுக் கொழும்பாலை வந்தவன் சொன்னவனாம்...'

"ஆர்...? என்ர மகனோ...? இது அவையள் ஏதோ கதை கட்டியிருக்கினம்...நீங்க கீறின கோட்டை அவன் தாண்டமாட்டானே!..."

'விளக்கை எதுக்கு...? நான் தேடிப்போய் பார்த்து வாறன்".

0 0 0

'என்ன, போன அடுத்த நாளே வந்திட்டியள்...முத்து வரயில்லியா...?எப்பிடி இருக்கிறான்...? ராமசாமி சொன்னது பொய்தானே...?' கொழும்பிலிருந்துவந்த சின்னத்தம்பியிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டாள் பொன்னம்மா.

சின்னத்தம்பியின் கோபம் எல்லைகடந்துவிட்டது.

'ஓ...உன்ரை மோன் நல்லாயிருக்கிறான்... சீ...இனி அவன் எனக்குப் பிள்ளையுமில்லை, நான் அவனுக்கு அப்பனுமில்லை...'

"என்ன அப்பிடியென்ன பரமசாமி சொன்னது...?"

"நெருப்பில்லாமல் புகையாது பொன்னம்மா... அவனுக்கு எழுதி முடிஞ்சு போச்சுது...பெட்டை பெரிய பணக்காரியாம். பணமிருந்தென்ன... அடக்கமில்லை..."

"நீங்கதானே குணம் பெரிசில்லை, பணம்தான் பெரிசு என்டுசொல்லுவியள்...சரி.. முத்து என்ன சொன்னான்...? கலியாணம் எப்பவாம்...?" பெற்றதாயின் உள்ளம் துடித்தது.

"கலியாணம் என்ன கலியாணம்... எழுத்தோடை சரி. இப்ப அவன் பெம்பிளைவீட்டிலைதான் இருக்கிறான். அவள் சொல்லுறபடிதான் நடக்கிறான். இன்னும் இரண்டு மாதத்திலை இங்கிலாந்துக்குப் போயினமாம்..."

"என்ன? அப்ப இனி இங்கை அவன் வரானோ...?"

"ஏன் இஞ்சை வாறான்?... "ஐயா! நீங்க பெண் பார்த்து நான் கலியாணம் செய்ய என்டால் இந்த ஜென்மத்திலை நடக்காது. நானேனே எனக்குத் தேடிக்கொண்டேன். இனிமேல் நான் நீங்க சொல்லுறபடி கேட்கத் தயாராகவில்லை' என்று முகத்திலை அடித்தாற்போல சொல்லிவிட்டானே'- வெறுப்புடன் பதிலளித்தார்.

"அவன் செய்ததிலேன்ன தப்பு..." இந்தளவிலை அவனு புத்தியாய் தப்பிவிட்டான்... பெம்பிளை பணக்காரி என்டால் சீதனம் எக்கச்சக்கமோ...?'-கேலியாகக் கேட்டாள் பொன்னம்மா.

"ஏண்டி, பகிடி பண்ணுறியோ...?"

சரி, சரி... பெம்பிளை எப்பிடி? சொல்லுங்கோவன்...'

'அவள் பெம்பிளையே... பணத்திமிர் பிடிச்சவள்... ஒரு சதமும் சீதனம் தரமுடியாதாம். பணக்காரர் சீதனம் குடுக்கிறதில்லைதான் இல்லாதவையிடம் கேக்கினமாம்..."

"அவ சொன்னதும் சரிதானே. இனி நீங்க என்ன செய்யப்போறியள்?'

"எனக்கு கை,கால் இருக்கு. நான் உழைச்சு என்ர மகளுக்கு நல்ல இடத்திலை கலியாணம் செய்து வைப்பம்", உறுதியாகச் சொன்னார் அவர்.

0 0 0

சின்னத்தம்பி தன் மகனுக்குப் பெண்பார்க்கப்போனது போய், இப்போது அவர் மகளைப் பெண்பார்க்க வந்தார்கள். மாப்பிள்ளையின் தந்தையாக, மிடுக்காகப் பெண்பார்க்கச் சென்று பழக்கப்பட்ட சின்னத்தம்பி இன்று, பெண்ணின் தந்தையாக அடங்கி ஒடுங்கிப் பணிவாக நின்றார். பெண்பார்க்க வந்தவர்கள் சீதனம் கேட்டார்கள், டொனேஷன் கேட்டார்கள். அவர்கள் கேட்டளவு கொடுக்க இவருக்குத் தகுதியில்லை, கெஞ்சினார்... ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

அவர் மனம் தளரவில்லை வேறு பல இடங்களிலிருந்தும் பெண்பார்க்க அழைத்தார் ஆனால் ஒன்றும் சரிவரவில்லை.


நாட்கள் வருடங்களாக வளர்ந்துகொண்டிருந்ததே தவிர, அவர் மகளுக்குத் திருமணம் நடைபெறவேயில்லை.

'நீங்க இப்பிடி இருந்தால் என்ன செய்யிறது. பிள்ளைக்கும் வயசுகூடிக்கொண்டு போகுது...' என்றாள். பொன்னம்மா.

"இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறாய்... மாப்பிள்ளை வீட்டார் கேக்கிற சீதனம், நகைநட்டுகள் எல்லாம் வைச்சிருக்கிறியோ...?' எரிச்

[10ம் பக்கம் பார்க்க[


வெங்காயம், பூடு செழிதாய் வளர்வதற்கு களைகளை நீக்கும்



ரம்றொட் உபயோகியுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:
J. L. மொறிசன் சன் அன் ஜோன்ஸ் லிமிட்,
த. பெ. எண்: 430 கொழும்பு-15

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
1. எஸ். சிவஞானம் 126, கே. கே. எஸ். ரோட்.
2. ரோயல் பார்மஸி ஆஸ்பத்திரி வீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை - நேரம் பிற்பகல் ஒன்றரைமணி.

அரட்டையடிக்கும் நண்பர்கள் எனது அறைக்கு வந்துசேரவில்லை. உண்ட களைப்பு-தூக்கம் படுக்கையில் விழுத்திவிடுமோ என்ற பயம்.

'சரி ஒரு படம் பார்ப்போம்'-தமிழ்ப்படம் ஓடிக் கொண்டிருக்கும் தியேட்டருக்குச் சென்றேன்.

கதிரையில் இருந்ததுதான் தாமதம்- கால்களை முதுகையும் கடிக்க ஆரம்பித்தன மூட்டைப்பூச்சிகள். கதிரையில் ஏதாவது கடதாசியைத் தான் மூட்டைக்கடி குறைவாக இருக்கும் என்ற எண்ணத்துடன் 'டோபி-கடலை' விற்கும் பையனை அழைத்தேன்; அவனிடம் பாட்டுப் புத்தகங்களைத் தவிர பத்திரிகைகள் இல்லை.

'சபி. ஸ திங் இஸ் வெற்றி நடை'- கதிரையில் போட்டு உட்காருவதற்காக-அட்டை உட்பட எட்டுப்பக்கங்கள் உள்ள பாட்டுப்புத்தகத்துக்கு பதினைந்து சதம் செலவாகியது.

'புத்தகத்தின் இரண்டாம் பக்கத்தில் படத்தின் 'கதைச் சுருக்கம்' என்ற தலைப்பில் சில வரிகள் அச்சிடப்பட்டிருந்தன. 'பெரும்பாலான தமிழ்ப்படங்களில் கதையில்லை' என்றுசொல்லும் விமர்சனங்களைப் படித்து- அவற்றை உண்மையென்று ஏற்றுக்கொண்டவன் நான். ஆனால் பாட்டுப்புத்தகத்தை பார்த்தபின்- 'பாட்டுப் புத்தகம் அச்சிடுவோர் உண்மையிலேயே திறமைசாலிகள் தான்' என்ற அபிப்பிராயம் உருவாகிறது. கதையே இல்லாத படங்களில் ஒரு கதையைக் கண்டுபிடித்து அதைச் சுருக்கமாகப் போட்டு- 'மீதியை வெள்ளித்திரையில் காண்க' என்றும் அச்சிட்டு விடுகிறார்களே!

# சிரிக்காதே...! சிந்தி...!!

# தமிழ்ப் படமொன்று பார்த்தேன்....

### உடுவை தில்லை நடராசா

மணி அடித்தது- விளக்கு அணைந்தது - மின்சார விசிறிகள் சுழல்வதை நிறுத்தின- விளம்பர சிலைடுகள். 'புகைத்தலைத் தடுக்கவும்' என்ற சிலைட்டை அடுத்து அதற்குப் பொருத்தமாக பீடி-சிகரெட் விளம்பரங்களைக் காட்டினார்கள், மாநகர சபை விதிகளின்படி தியேட்டருக்குள் புகைத்தல் சட்டப்படி குற்றமாம்- ஆனால் அவற்றை மறந்திருக்கிறார்கள். ஓ..வெளியே சிகரெட் தட்டுப்பாடு- எனவே தியேட்டரில் வாங்குகிறார்கள் போலும்.

தொடர்ந்து 'வருகிறது சிவாஜி கணேசன் அளிக்கும்......' எதிர்பாருங்கள். எம்.ஜி. ஆர் நடித்த...'-பட விளம்பரங்கள். ரசிகர்களிடையே இந்த சிலைடுக்கும்-கைதட்டலும்- கூச்சலும்.

தமிழ்பட ரசிகர்களே இப்படித்தான் ஆனந்தத்தை சிலைடுகளுக்கு விசிலடிப்பதன்மூலமும் ஆத்திரத்தை சுவரொட்டிகளுக்கு சாணி யடிப்பதன்மூலமும் காட்டிக் கொள்வார்கள். பாவம் வேறு வழிகளே தெரியாது போலிருக்கிறது.

படம் ஆரம்பமாகியது. ஒரு நடிகனை, நடிகை. 'குட் மார்னிங்' சொல்லி எழுப்புகின்றாள் காலையில் நித்திரை விட்டெழும்புபவனைப் பார்க்கின்றேன்-மடிப்புக் கலையாத சேட், வேட்டி, குலையாத தலை, பவுடர்பூசி பொட்டு வைத்தமுகம். 'மடிப்புக்குலையாத சேட்-வேட்டி' வேண்டுமானால் 'நொன் அயர்' உடுப்புகள் என்று சமாதானம் சொல்லலாம். குலையாத தலைக்கும் - பவுடர் பூசி பொட்டுவைத்த முகத்துக்கும்...?

இதுமட்டுமல்ல—

அன்றாடம் கஞ்சிக்கேதிண்டாடும் ஏழைகள் பட்டுப் புடவை அணிவதும்- உயர்ரக கைக்கடிகாரங்கள் கட்டுவதும்- நகையலங்காரம் செய்வதும் எப்படி?

காதலனும் காதலியும் கடற்கரையிலும் சாலையோரத்திலும் ஓடித்தொட்டு விளையாடுகின்றார்கள்; கட்டிப் பிணைந்து ஏதோ செய்கிறார்கள். அந்த நேரத்தில் கடற்கரைக்கு ஒருவருமே போவதில்லையா? அல்லது கடற்கரைக்கு ஆட்கள் வராத நேரம்பார்த்து - பாலத்தால் போக்குவரத்து இடம் பெறாத நேரம் பார்த்து காதல்செய்கிறார்களோ?

படத்தில் இடம்பெற்ற பாடல்களில் 'டிங் டிங்'- 'ஆஹா கயா'- 'லாலோ ஜிலாலே'-போன்ற அர்த்தமற்ற சொற்களோடு, இடையிடையே இரட்டை அர்த்தமுள்ள வசனங்களும் வருகின்றன.

நகைச்சுவை நடிகர் முகத்தை எப்படியெல்லாமோ நெளித்து 'அம்புப்பாடிகள்' சொல்லி சிரிக்கவைக்கிறார். அப்போது தியேட்டரில் குழந்தையொன்று அழுகிறது 'தமிழ்ப்படங்கள் வளர்ந்துள்ள நிலையைப் பார்த்து குழந்தை அழுகிறது' என்று எண்ணிய எனக்கும் அழவேண்டும் போலத் தோன்றுகிறது. ஆனால் வெட்கமாக இருக்கிறது.

வில்லன் பாத்திரத்தைவிட வீரமிக்கவன் நகைச்சுவை நடிகைதான். அவன்செய்யும் வீர சாகசங்களையும் நகைச்சுவை நடிகனைப் படுத்தும் பாடும் சொல்லமுடியாது.

'இடைவேளை' வருகிறது. 'பார் மேல் மாடியில்' என்று ஒரு சிலைட் காண்பிக்கப்படுகிறது. பல்கணியைப் பார்க்கின்றேன் ஒரே பெண்கள் கூட்டம் பின்புதான் விஷயம் தெரிந்தது Bar up Stairs என்ற ஆங்கிலத்தின் தமிழாக்கம் 'பார் மேல் மாடியில்'

இடைவேளையின்போது பழைய தமிழ்ப் படங்களிலிருந்து சில பாடல்கள் ஒலிபரப்பினார்கள். உண்மையிலேயே அந்த நாட்களில் தியாகராஜபாகவதர், என். எஸ். கிருஷ்ணன், பி. யு. சின்னப்பா பாடிய பாடல்கள் அர்த்தமுள்ளதாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கின்றன.


மீண்டும் மணியடிக்கிறது 'கும் கும்' குத்துக்கள் ஓடிக் களைத்து விளையாடும் காதல் காட்சிகள் ஏதோ ஒரு சிக்கல் இருப்பதாக படத்தில்வரும் பாத்திரங்கள் பேசிக்கொள்கின்றன.

படம் முடிவடையும் கட்டம்-மண்ணேர்காமல் மண் வெட்டியால் மெதுவாக நிலத்தைக் கொத்தி 'விவசாய' விவசாயம் செய்த கதாநாயகன், வில்லனையும் வேறு ஒரு இருபது முப்பது பேரையும் அடியடியென்று அடிக்கிறான். கதாநாயகன் கைதூக்கினதும் 'டொம் டொம்' என்ற சத்தம் வில்லனோடும் மற்றவர்களோடும் போராடுகிறாராம்.

விசில் சத்தம் கேட்கிறது அவ்வளவு நேரமும் எங்கோ தூங்கிக்கொண்டிருந்த பொலிஸ்காரர் ஓடிவந்து வில்லனையும் அவனைச்சேர்ந்தோரையும் கைதுசெய்கின்றனர். கதாநாயகனைப்போல இன்னொருவர் வருகிறார். அவர் கதாநாயகனோடு கூடப் பிறந்தவராம். ஓஹோ... 'டபிள் ஆக்டிங்' இப்போதுதான் படத்தில் வந்த பாத்திரங்கள் பேசிக்கொண்ட சிக்கல் விடுபடுகிறது. இந்த 'டபிள் ஆக்டிங்'கை வைத்து எத்தனையோ படங்கள்வந்து விட்டன இன்னும் எத்தனை வருமோ?

இறுதியில் 'வணக்கம்' காட்டப்படுகிறது. படம் ஆரம்பமாகியதும் நின்றுவிட்ட மின்சார விசிறிகள் வேலை செய்யத்தொடங்குகின்றன. தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் ஏமாற்றுவது போதாதென்று தியேட்டர் சொந்தக்காரரும் படம்தொடங்கியதும் மின்சார விசிறியை நிறுத்தியும், படம் முடிந்ததும் மீண்டும் இயக்கியும் காற்றோட்டம் காட்டி ரசிகர்களை ஏமாற்றுகிறார்கள்.

'புயலுக்குப்பின் அமைதி துன்பத்திற்குப் பின் இன்பம்' என்றால் தரக்குறைவான தமிழ்ப்படங்களுக்குப் பின் தரம் உயர்ந்த தமிழ்ப்படங்கள்....?




### 'பூஜைக்கு வந்த மலர்'

ஆசிரியை — திருமதி ந. பாலேஸ்வரி. வீரகேசரி பிரசுரம், விலை ரூபா 2-25.

ஒரு குடும்பத்தின் கௌரவம், அக்குடும்பத்தின் அமைதி ஆகியவற்றைப் பேணும் பொறுப்பு பெண்ணுடையது. இந்த அரிய பொறுப்பை பெரியதொரு தியாகத்தைச் செய்து நிறைவேற்றிவிடுகிறாள் 'பூஜைக்கு வந்த மலர்' கதாநாயகி மாலதி.

தன் சகோதரியினால் குடும்ப அமைதி குலையப்போகிறது, குடும்பகௌரவம் காற்றிலே பறக்கப்போகிறது என்பதையுணர்ந்த மாலதி தன்சகோதரிக்காக குடும்பத்துக்காக தன் காதலைத் துறந்துதன்னைச்சேரவிருந்த வழியைத் தானேற்று அவளை வாழவைக்கிறாள். தன்வயிற்றில் பிறவாத குழந்தையைத் தன் குழந்தையாக ஏற்று அவனையும் உத்தமனாக்கி விடுகிறாள். இந்த தியாகத்தின்னை காலன் பறித்துக்கொண்டபோது அவள் நினைக்குறிப்பிலிருந்து அறிந்த செய்திகளால் அப்பெண் தீயிலிட்ட புழுவெனத்துடிக்கும் துடிப்பு வாசகர் உள்ளத்தையும் உருக்கவைக்கிறது. இந்த இடத்தில் ஆசிரியை பாலேஸ்வரி நம்மையும் அந்தப்பெண் ஜஞர்த்தியுடன் ஒன்றிப்பிணைத்து விடுகிறார். ஆசிரியையின் கற்பனையில் உதித்த தியாகத்தின் சின்னமாகவும், பொறுமையின் எல்லையாகவும், பண்பின் இலக்கணமாகவும், அன்பின் உறைவிடமாகவும் தாய்மையின் புகலிடமாகவும் விளங்கும் இந்த கதாநாயகி மாலதி பூஜைக்கு எடுக்கும் மலரின் புனிதத்தன்மையைத் தாமிகதை முழுவதிலும் உயிரோட்டம் அளித்து நறுமணம் பரப்புகிறாள்.

'தந்தை வீடு', 'சுடர்விளக்கு', 'நினைவு நீங்காதது', 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' 'உள்ளக் கோயிலில்' ஆகிய நாவல்களை படைத்து புகழ்பெற்ற திருமதி பாலேஸ்வரி சமூகத்தின் சீர்கேடுகளையும் மேடுபள்ளங்களையும் மையமாகக்கொண்டு புனைந்திருக்கும் 'பூஜைக்கு வந்த மலர்' அவரின் உன்னத படைப்பு

திருமதி பாலேஸ்வரியை கதாசிரியை என்று கூறுவதைவிட ஒரு கதாபாத்திரமாகவே மாறிவிட்டார் எனலாம். பாத்திரப்படைப்புக்கள் அவ்வளவு அருமையாய் அமைந்துள்ளன. —ஜி

*

### தாவரபோசன சமையல்

ஆசிரியர்: திருமதி புஷ்பாஞ்சலி முருகேசம்பிள்ளை. விலை: ரூபா 6/-

[illegible]

திருமதி புஷ்பாஞ்சலி முருகேசம்பிள்ளை பெரிதும் முயன்று 'தாவர போசன சமையல்' என்ற நூலை இயற்றியுள்ளார். சமையல் சம்பந்தமான நூல்கள் நமது நாட்டில் வெளிவருவது மிகவும் குறைவு. அதிலும் மச்சக தாவரபோசனம் பற்றிக்கூறும் நூல்கள் மிக அரிது. நூலாசிரியர் தான் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மைகளை அழகாகத் தொகுத்துக்கூறியுள்ளார். ஆரம்பத்தில் ஒரு சமையல் அறையில் இடம்பெறவேண்டிய பொருட்களை வகைப்படுத்தி ஒரு பட்டியல் தயாரித்துக்கொடுத்திருப்பதுமிகவும் சிறந்தது. சமையலை நல்லமுறையில் செய்வதற்கு இது மிகவும் உதவியாயிருக்கும், ஆசிரியர் கையாண்டுள்ள அளவுகள் சாதாரண கிராம மக்களாலே கையாளப்படத்தக்கதாக உள.

காலை, மாலை ஆகாரவகைகள். இனிப்பு, காரம், சிற்றுண்டி வகைகள். பான வகைகள், நோயாளருக்கு ஏற்ற உணவுவகைகள் முதலியன தயாரிக்கும் முறைகளை விளக்கமாகக் கூறியிருப்பது போற்றுதற்குரியது. மேலும்தற்காலத்திற்கேற்ப நவீன முறையில் கேக், டெசர்ட் வகைகள், பிஸ்கட் முதலியன சைவமுறைப்படி தயாரிக்கப் படலாம் என்பதை நிரூபித்துள்ளார். அறுசுவை உணவு இலகுவாகவும் சத்துக்கெடாமலும் அரிவையர் தயாரிப்பதற்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. மற்றும் முதன் முதலாகச் சமையல்தொடங்குபவர்களுக்கும், ஈழத்தில் சமையல் பதார்த்தம் தெரியாதவர்களுக்கும் இந்நூல் மிகவும் பிரயோசனமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. உணவுப் பொருட்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் உள்ளூர்த் தானியங்களைப் பயன்படுத்தி உணவு தயாரிப்பது மிகவும் சிறந்தது.

நீண்ட நாட்களுக்கு உபயோகிக்கத்தக்க ஊறுகாய், அச்சாறு வற்றல்வகைகள், மிளகாய்ச் சம்பல் முதலியன வீட்டில் இருந்தால் அன்றாடத் தேவைகளுக்கும் விருந்து சமயங்களுக்கும் பயன்படும். பழங்கள் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய காலங்களில் அவற்றிலிருந்து ஜாம் தயாரித்துவைத்தால் மிகவும் உதவியாய் இருக்கும். காலை மாலை உணவோடு ஜாம் சேர்த்துப் பரிமாறலாம், சமையலை இலகுவாகவும் சுவையாகவும் சிறந்த முறையிலும் செய்து சத்துள்ள பலவகை உணவுகளை தயாரிப்பதற்கு ஏற்றமுறைகளை இந்நூல் விளக்குகின்றது. நூலாசிரியர் சமையற் துறையிலே பெரிதும் ஈடுபாடுள்ளவராதலால் இம்முறையில் ஈடுபட்டு சிறந்த ஒரு நூலை வெளியிட்டுள்ளார்.

நூலின்பிற்பகுதியில் கூறப்பட்டுள்ள குறிப்புகள் எவருக்கும் எக்காலத்துக்கும் பயன்படத்தக்கவை. இந்நூலில் கூறப்பட்டவற்றைக் கையாண்டால் சமையல் துறையில் அதிக வெற்றியடையலாம் இது பாடசாலைகளிலே பாடப்புத்தகமாக மட்டுமன்றி எல்லா வீடுகளிலும் இருக்கவேண்டியதொன்றாகும். நூலாசிரியர் சைவ உணவின் சிறப்பையும் அதனை நல்ல ருசியாகத் தயாரிக்கலாம் என்பதையும் எடுத்துக்கூறியுள்ளார். அவருடைய முயற்சியும் தன்னோக்கமும் எல்லோராலும் பாராட்டத்தக்கது. அவருடைய ஆக்கமும் ஊக்கமும் நூலாக இன்று வெளிவந்துள்ளது.


இலங்கையில் இதுவரைகாலமும்
வெளிவந்திராத-
முற்றிலும் புதிய—நவீன—அம்சங்களைத்
தாங்கி விரைவில்
வெளிவரவிருக்கிறது—
கமலம்
தமிழ் வார சஞ்சிகை
பிரசுரிப்பாளர்:-
'ஈழநாடு' — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரற்ற
புகையின்பம்
தருவது
பிரபா பீடிகள்
எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்கள்:
ஏ.ரி. பிரபா இன்டஸ்றி,
சங்கானை.

## மணிமொழி

கல்லும் முள்ளும் புதர்களும் நிறைந்த காட்டில் நாம் வெறுங் காலோடு நடப்பது முடியாத காரியம். ஆனால் அந்தக் காடு முழுவதும் தோல் போட்டுமூடினால் அல்லது காலில் செருப்பு அணிந்து கொண்டால், நடக்கலாம். காடு முழுவதும் தோல்போட்டு மூடுவது முடியாத காரியம். ஆகவே நாம் கால்களுக்குச் செருப்புப் போட்டுக் கொள்வதே சரியான வழி. உலகில் மனிதனுக்கு அளவற்ற தேவைகளும் ஆசைகளும் உண்டாகித் துன்பத்தைக் கொடுக்கின்றன. அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள இரண்டே வழிகள் இருக்கின்றன. ஒன்று, தேவைகளைப் பெற்றுத் திருப்தி அடைவது; மற்றது, தேவைகளை விட்டுவிடுவது. மனிதன் நினைத்ததையெல்லாம் அடையமுடியாது. ஆகவே தேவைகளைக் கைவிடுவதே அறிவுடைமை.

—ராமகிருஷ்ணபரமஹம்சர்

மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்

# அரசியல் அமைப்பும் தமிழ் மொழியும்

# சமரச வழியே சாலச்சிறந்தது!

**எஸ். சிவசுப்பிரமணியம்**

**1972-ம்** வருடம் மே மாதம் 22-ந் திகதி சட்டமாக்கப்பட்ட ஸ்ரீலங்கா அரசியல் அமைப்பிலும், 1958-ம் வருடத்திய 28ம் நம்பர் தமிழ் மொழி (விசேஷ உபயோக) சட்டத்திலும் தமிழ்மொழியின் நிலைமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றிய இன்றைய சட்டநிலைமை விளக்கப்படவேண்டும். இதற்குத் திருத்தங்களும் விரிவுகளும் தேவை. இன்றைய சூழ்நிலையில், புதிய அரசியல் அமைப்பும், அதன்விதிகளும் அமுலுக்குக் கொண்டுவரும் பொழுது, இதுபற்றிய விளக்கங்களும், விரிவுகளும், திருத்தங்களும் செய்யப்படுவது சாலச்சிறந்தது. நாட்டின் சில பகுதிகளிலே நீதிமன்றங்களில் தமிழ்மொழியிலும் பதிவுப்பத்திரங்களை வைத்திருக்கச் சட்டம் செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்க்கண்ட விதிகள் தமிழ்மொழி சம்பந்தப்பட்டவையாகும். அதாவது 8வது பிரிவு (1, 2) 9-வது பிரிவு (1, 2) 10ம் பிரிவு (1) 11வது பிரிவு முற்றிலும். (இந்தப் பிரிவு 6 உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.) 46-வது பிரிவு. மேற்குறித்த தமிழ் மொழியின் நிலைமையைப்பற்றி விரிவாக விளக்கவில்லை. அதன் நிலை வெளிப்படத் தெரிவிப்பதாகவும், உட்கருத்துள் அடங்கியதாகவும் உள்ளது.

1958-ம் வருட 28வது சட்டமாகிய தமிழ் மொழி [விசேஷ உபயோக] சட்டம் உள்ளிட்டு மேற்குறித்த விதிகளை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 16, 17, 18வது பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்க வேண்டும். 16வது பிரிவு அரசாங்க நடைமுறையின் கொள்கைகளை பற்றிக்குறிப்பிடுகிறது. 16 [1] பிரிவு கூறுவதாவது!—

'பின்வரும் உப பிரிவுகளில் அடங்கிய, அரசாங்க நடைமுறைபற்றிய கொள்கைகள், சட்டங்களைச் செய்யவும், ஸ்ரீலங்காவின் ஆட்சியை நடத்தவும்வழிகாட்டியாக இருக்கும்'

[இதில் முக்கியமான சொற்கள் தடித்த எழுத்தில் உள்ளன] 16வது பிரிவின் 2வது உபப்பிரிவு, அரசாங்கத்தின் நோக்கங்களைக் குறித்துக் கூறுவதாவது.—

ஏ. பிரஜைகளின் எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும், கோஷ்டி உரிமைகளும் உள்ளிட்டு பூரணமாக அடையச் செய்தல்.

[ஈ] மக்களின் தார்மீக, கலாச்சார தரத்தை உயர்த்துதல்.

16வதுபிரிவின் 4வது உப பிரிவு கூறுவதாவது!-

இனம், சமயம் உள்ளிட்டு மற்ற கோஷ்டிகளும் அடங்கிய ஸ்ரீலங்கா மக்களின் எல்லாப் பிரிவினரிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கும்.

16-வது பிரிவின் 5வது உப பிரிவு கூறுவதாவது:-

[5] பொருளாதார சமூக [illegible] ளுக்கும் சரிசமமான சந்தர்ப்பங்களை வழங்க அரசாங்கம் முயற்சிக்கும்.

16வது பிரிவின் 6வது உப பிரிவு கூறுவதாவது!

தேசிய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அரசாங்கத்திலும் பங்குபற்ற சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களையும் அளிப்பதுடன் ஸிவில் நிர்வாகத்திலும் நீதிநிர்வாகத்திலும் பங்குபற்றவும் மக்களுக்கு சந்தர்ப்பமளிப்பதன் மூலம் அரசின் ஜனநாயக கட்டுக்கோப்பையும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் அரசாங்கம் முற்படும்.

16-வது பிரிவின் 7வது உப பிரிவு கூறுவதாவது!

மக்களின் கலாசாரங்களை மொழிகள் இவற்றை அபிவிருத்திசெய்ய அரசாங்கம் உதவும்.

17-வது பிரிவுபடி 16-வது பிரிவின் விதிகள் சட்ட உரிமைகளை அளிக்காவிடினும், எந்த நீதிமன்றங்களும் அவற்றை அமுலுக்குக் கொண்டுவரும்படிசெய்ய முடியாவிடினும் அரசியல் அமைப்பின்படியும் அரசியல் ரீதியாகவும் தார்மீக முறையிலும் 16-வது பிரிவின் நோக்கத்துக்கு அரசாங்கம் உரியமதிப்பு அளித்து நிர்வாகத்தை நடத்தவேண்டியிருக்கும். நாளாவட்டத்திலே அரசியல் அமைப்பு அரசியல் தார்மீக நோக்கங்களை நிலைத்து நிற்பதாக இருக்கும்.

அரசியல் அமைப்பு திட்டத்தின் ஆரம்பத்திலேயே இத்திட்டம் ஸ்ரீலங்காவின் அடிப்படைச் சட்டமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. குடியரசின் நோக்கங்களையும் அபிலாஷைகளையும் அமுலுக்குக்கொண்டுவர தேவையான விதிகளைச் செய்யவும் சம்பிரதாயங்களை ஏற்படுத்தவும் தேசிய அரசசபைக்கும் மந்திரிசபைக்கும் பல்வேறு அமைச்சுகளுக்கும் அதிகாரமுண்டு. இது அரசியல் நிர்வாக ஜனநாயக முறையுமாகும்.

இவ்வித நிலைமையை அரசியலும் அரசியல் அமைப்பும் ஆதரிப்பதுடன் அரசியல் அமைப்பு தேசிய விஷயங்களில் சமுகமான அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்று விரும்பும் எல்லா பிரஜைகளின் குறிக்கோளாகவும் இருக்கும்.

அரசியல் அமைப்பு சட்டக்கொள்கைகள் இவற்றைக்குறித்து விரிவாக விவாதித்துக்கொண்டு போவது என் நோக்கமல்ல. ஒத்துப் போகவேண்டியதே முக்கியமாக இருக்கும் விஷயங்களில் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது விரும்பத்தக்கதாகும். மிகநுணுக்கமாக ஆராய்ந்து கொண்டுபோனால் நம்மனதிலுள்ள முக்கிய நோக்கங்களையும் தோற்கடிப்பதாயும் ஆகிவிடலாம். சென்றகாலத்தில் கண்டபடி நடத்துள்ள வாக்குவாதங்கள் நன்மையைவிட தீமையையே அதிகம் விளைவித்துள்ளன. கெட்டித்தனமான வாதங்கள் சிறப்பாக ஈழத்தமிழர் விஷயத்தில் தற்கொலையிலேயே பொதுவாக முடிந்துள்ளன.

இதை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு ஒருவார்த்தை: சட்டம், அரசியல் சம்பந்தமான விஷயங்களில் மட்டுமல்ல, பொதுவாக எல்லா விஷயங்களிலும், ஒரு கட்டத்தில் தவறாகத் தோன்றும் ஒரு கருத்து பின்னர் மிக முக்கியமானதாகவும், நிலைமைக்கே அடிப்படையான ஆதாரமாகவும் மாறிவிடவும் கூடும். பயனற்றதென்று வீசிவிடும் ஒருகல், கட்டடத்துக்கே மிக முக்கியமானதாகவும் இருக்கக்கூடும். தங்கள் கருத்து தவறாகவும் இருக்கக் கூடுமென்பதையும் மறந்துவிடக்கூடாதென்று மற்றோர் பழமொழி தெரிவிக்கிறது. நமது தலைவர்கள், அரசியல் வாதிகள், நியாயதுரந்தரர்கள் முதலியவர்களுக்கு இந்த முதுமொழிகளை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

பிரபல தமிழ்த்தலைவர்கள் ஆரம்பித்த ஓர் இயக்கம், காந்திமகாத்மாவின் சத்தியாக்கிரகக் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தியின் கொள்கைபற்றி அவரைப் பின்பற்றுபவரில் சிறந்த ஒருவரான ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறும் இந்த மணிமொழி பயனுள்ளதாக இருக்கும்.

"எல்லாமனிதரும் சகோதரர்கள் என்பதும், அவர்களிடையே ஏற்படும் எல்லா வேற்றுமைகளையும் அகிம்சா முறையிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுமே காந்திஜியின் அடிப்படை உபதேசம். அகிம்சை என்பது, காந்திஜியைப் பொறுத்தவரை வன்முறையற்றதுமட்டுமல்ல. அது ஆக்கமுறை. எப்போதும் நட்பையும், சமரசத்தையும் நாடுவதேயாகும். அது அமைதிமூலமே ஒருவேளை வாழ்க்கைத்தரத்தை அடையமுடியுமென்ற நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டது. பிரிட்டிஷாரை இப்படித்தான் எதிர்த்துப் போராடினோம். பலாத்காரத்தை ஒதுக்கி, சமரசத்திலும் பேச்சுவார்த்தைகளிலும் பூரணநம்பிக்கை வைத்தோம்."

[8ம் பக்கம் பார்க்க]

ஈழநாடு

பரிதாபி வருடம் ஆனி மாதம்
5-ம் திகதி (18—6—72)

## சம்பளமும் செலவும்

அதிகரிக்கும் வாழ்க்கைச்செலவை முன்னிட்டு, அரசாங்க ஊழியர்களுக்கு ஐம்பது ரூபாய்வரை சம்பள உயர்வு அளிக்கப்படலாமென்று ஒரு பத்திரிகைச்செய்தி தெரிவிக்கிறது.

மாதம் 200 ரூபாய்க்குக் குறைந்த ஊதியம் பெறுவோருக்கு 30 முதல் 50ரூபாய் வரையும், 200முதல்300 ரூபாய் வரை பெறுவோருக்கு 15 முதல் 30ரூபாய் வரையும் சம்பள உயர்வு கிடைக்கலாமென்று கூறப்படுகிறது.

உணவு முதலிய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏறிவரும் இக்காலத்தில் குறைந்த சம்பளக்காரர்கள் குடும்பத்தை நடத்துவது மிகவும் சிரமம். ஆகவே அவர்களது கஷ்டங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உண்மையாயின் அது நல்லதே.

ஆனால் வாழ்க்கைச் செலவுகள் அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமன்றி பொதுமக்கள் அனைவருக்குமே நெருக்கடியைக் கொடுக்கின்றது. எனினும் தனியார் ஸ்தாபனங்களில் வேலைசெய்பவர்களுக்கும், மற்றும் சம்பளத்துக்கு வேலை செய்யாமல், சுயமாக உழைப்பவர்களுக்கும் வேலையற்றோர்களுக்கும் கஷ்ட நிவாரணம் அளிக்க வேண்டாமா?

ஒரு சாராருக்கு மட்டும் சம்பள உயர்வு கிடைத்து, மற்ற ஊழியர்களுக்கு அது கிடைக்காவிடின், அதனால் பலருக்குச் சிரமம் அதிகரித்து, பொதுமக்களிடையே அதிருப்தி பெருகுவதாகும். வாழ்க்கைச் செலவும் சம்பள உயர்வும் போட்டியிட்டுக்கொண்டு போனால் அது பணவீக்கத்தில் தான் முடியும்.

அரசாங்க ஊழியர் உள்ளிட்டு பொதுமக்களின் கஷ்டங்களைக் குறைக்க ஒரேவழி வாழ்க்கைச்செலவைக் குறைப்பதுதான். அதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையே நிலைமையை உண்மையில் சீர்படுத்துவதாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org